நாள்.05.03.2026

**அசல் வழக்கு எண். 71/2019**
**பெயர். சிங்காரவேல்**

**த.பெ.வீரப்ப தேவர்**

**<u>வா.சா.1– பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அர்ச்சுனமணி எனக்கு என்ன வேண்டும் என்றால் என் ஒரே பையன். அர்ச்சுனமணிக்கு பவர் ஏஜெண்ட் என்ற முறையில் நான் இந்த வழக்கை நடத்துகிறேன். என் மகன் எங்கிருக்கிறார் என்றால் சிங்கப்பூரில் 10 வருடமாக இருக்கிறார். அவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிப்பேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் ச.எண் தெரியுமா என்றால் 62ஏ/14/2. எவ்வளவு விஸ்திரணம் என்றால் 60 குழி. அதன் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு சமபங்கு கொடுக்காமல் கூடுதலாக பிரதிவாதிகள் எடுத்துக்கொண்டதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து எனக்கு சொந்தம் என்று நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் விஜயத்தம்மாள் வழக்கு தாக்கல் செய்தார். அவர் இறந்தபிறகு என் மகனை வழக்கில் சேர்த்தோம். அவருக்கு அதிகாரம் பெற்ற முகவர் என்ற அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

என் தந்தைக்கு எத்தனை மனைவிகள் என்றால் 2 பேர். முதல் மனைவி பெயர் சிந்தாமணி அம்மாள். 2ம் மனைவி பெயர் முத்துலட்சுமி. சிந்தாமணியின் வாரிசுகள் பெரியநாயகத்தமாள், விஜயத்தம்மாள். 2ம் மனைவியின் வாரிசுகள் மல்லிகா, சிங்காரவேலு, தர்மராசு. என் சகோதரி மல்லிகாவை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். பெரியநாயகத்தமாள் எப்போது இறந்தார் என்றால் 1995 ல். விஜயத்தம்மாள் 2019 ல் இறந்தார். பெரியநாயகத்தமாள், விஜயத்தம்மாளுக்கு நேரடி வாரிசுகள் கிடையாது என்றால் ஆமாம். பெரியநாயகத்தமாள், விஜயத்தம்மாளும் 1ம் பிரதிவாதிக்கு சொத்தை விற்பதற்காக ஒரு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை. கரண்ட் இழுப்பதற்காக மட்டும்தான் பவர் கொடுத்தார்கள். அந்த பவர் ஆவணம் 1994 ல் எழுதப்பட்டது என்றால் ஆமாம்.

அந்த பவர் ஆவணத்தின் அடிப்படையில்தான் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதி அவருடைய மகன்தான். மேற்படி கிரைய விவரத்தை நான்

எப்போது தெரிந்துகொண்டேன் என்றால் 2018 ல். கிரைய பத்திரத்தை

ரத்து செய்ய நான் மனு கொடுத்தேனா என்றால் ஆமாம். மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலும், மதுக்கூர் சார்பதிவாளர் அலுவலகத்திலும் மனு கொடுத்தேன். எந்த தேதியில் என்றால் ஞாபகமில்லை. அந்த மனுவின் பேரில் என்னையும் 1ம் பிரதிவாதியையும் பதிவாளர் விசாரித்தாரா என்றால் ஆமாம். மாவட்ட பதிவாளர் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு உத்தரவு பிறப்பித்தாரா என்றால் ஆமாம்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.